(2) கி.சதானந்தம், 10–41, மேட்டுத் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

### 13–வது வார்டு

**அமைப்பாளர் :** ச.வருதராஜன், 9–72, தோப்புக்காடு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.சண்முகராஜ், 7–64, பெருமாள் கோயில் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) சி.செந்தில்குமார், தோப்புக்காடு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

### 14–வது வார்டு

**அமைப்பாளர் :** சு.கௌதம், 5–50 (2), புதுக்காடு தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.துரைசாமி, 2–145, கிழக்குத் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) ரமேஷ்குமார், 7–39, வண்டிக்காரன் தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

### 15–வது வார்டு

**அமைப்பாளர் :** மா.சதீஸ்குமார், 14–42, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.மா. பிரவீன், 77–4, பழைய நெசவாளர் குடியிருப்பு, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல். (2) க.ரமேஷ்கண்ணா, 4–7, கிழக்குத் தெரு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 157 : மு.மாசிலாமணி, 2/18, முனியப்பன் கோயில் தெரு–2, குருசாமிபாளையம் இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 158 : ப.சங்கர், 3/3, கிழக்குத் தெரு, குருசாமி பாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 159 : அ.விக்னேஷ், 128/14, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 160 : மோ.சரண்குமார், 1, புதூர் குடியிருப்பு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 161 : இ.சதீஸ்குமார், 8/13, குருசாமிபாளையம், பிள்ளாநல்லூர், பேளூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 162 : ப.பூபதி, 11/23, மேட்டுத்தெரு, பிள்ளாநல்லூர், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 163 : க.சரவணன், 60/4, நெசவாளர் குடியிருப்பு, குருசாமிபாளையம், நாமக்கல்.

பாகம் – 164 : கா.இளவரசன், குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 165 : மா.இளங்கோ, 13/48, குருசாமிபாளையம், இராசிபுரம், நாமக்கல்.

## பட்டணம் பேரூர்

### 1–வது வார்டு

**அமைப்பாளர் :** பெ.துரைக்கண்ணன், 27, சடையன் தோட்டம், போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.வியாசன், 40–1, போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ச.நவீன்குமார், 1–26, சடையன் தோட்டம், பட்டணம், இராசிபுரம்.

### 2–வது வார்டு

**அமைப்பாளர் :** ர.தேசப்பிரவீன், 33–1, நேரு நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கா.சுபாஷ், 6/20, கருப்பண்ணார் கோயில், வண்டிக்காரர் தோட்டம், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) கு.சரவணன், 2–36, நேரு நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 3–வது வார்டு

**அமைப்பாளர் :** பிரவீன்குமார், 156–96–ஏ, அம்பேத்கர் நகர், குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.துர்கேஷ், 8–3, செல்லியம்மன் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) த.ஜெயசூர்யாசிம்மா, 1–3, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 4–வது வார்டு

**அமைப்பாளர் :** கோ.பாலாஜி, கருப்பண்ணார் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இரா.கமலேஷ், குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) பெ.காந்தமுத்து, 3–3–ஏ, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 5–வது வார்டு

**அமைப்பாளர் :** செ.பரத், 5–74, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) த.பாலகிருஷ்ணன், 4–2, இந்திரா நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) க.மகிழன், 8–3, செல்லியம்மன் கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 6–வது வார்டு

**அமைப்பாளர் :** இ.சந்துரு, 101, உண்ணாமலைத் தோட்டம், மேட்டாங்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.பூபாலன், 6/16, காட்டுக் கொட்டாய், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) சு.மாணிக்கவேல், 82–2, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 7–வது வார்டு

**அமைப்பாளர் :** பா.கவின் கிஷோர், 15/7, பரமேஸ்வர் நகர், பட்டணம் , இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) பா.பிரபாகரன், 159, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ம.ஸ்ரீநாத், 199–52, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 8–வது வார்டு

**அமைப்பாளர் :** சு.ஸ்ரீதரன், 58–59, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஜெ.கௌரிசங்கர், 8–1, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) ரா.ஹரிகரன், 26–29, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 9–வது வார்டு

**அமைப்பாளர் :** சே.மணிகண்டன், 60, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.கபிலேஸ்வரன், 8–34, திருவள்ளுவர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.தாமரைச்செல்வன், 12–ஏ, திருவள்ளுவர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 10–வது வார்டு

**அமைப்பாளர் :** சு.பிரபாகரன், 99–10, ஏரி வயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.பூபாலன், 106, சக்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.தரணி, 59–ஏ, ஏரிவயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 11–வது வார்டு

**அமைப்பாளர் :** சி.விக்னேஷ்குமார், 13–1, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மணிகண்டன், 47–சி, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.(2) அ.பழனிவேல், 51–ஏ, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 12–வது வார்டு

**அமைப்பாளர் :** பா.பேரரசன், 130, பள்ளிக் கூடத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) த.விக்னேஷ், 87, பள்ளி வீதி, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ச.நவீன்குமார், 331, பள்ளிக்கூடத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 13–வது வார்டு

**அமைப்பாளர் :** ப.ஜெகன், 103, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வெ.ரோசன் குமார், 58–1, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ந.அஸ்வின், 109, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 14–வது வார்டு

**அமைப்பாளர் :** ர.மாணிக்கம், 103–118, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) பூ.கார்த்திக், 91–1, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) ரா.பிரபு, 101, வடக்குத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

### 15–வது வார்டு

**அமைப்பாளர் :** பா.இனியவேல், 104, ஏரிக்காடு, ஆலத்தூர் ஏரி, வயக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மா.காவியன், 4–5, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல். (2) மா.விக்னேஷ், 4–5, பாவாத்தா கோயில் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 81 : பா.வசந்தராஜ், 1/2,போதமலை தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 82 : மா.கார்த்தி, 10/11, குச்சிக்காடு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 83 : சு.கிருஷ்ணமூர்த்தி, 157, பள்ளிக்கூடத் தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 84 : க.சுஜித்குமார், 76,கணபதி தோட்டம், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 85 : பா.விஷால், 15/7, பரமேஸ்வரர் நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 86 : ரா.மணிகண்டன், 47–சி, காந்தி நகர், பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

பாகம் – 87 : பா.ஜெகன்பாண்டியன், 103, நடுத்தெரு, பட்டணம், இராசிபுரம், நாமக்கல்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 18–10–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

9

### வேதாரண்யம் அய்யனார் கோயிலுக்குச் சொந்தமாக சமுதாயக் கூடம் அமைத்துத் தரப்படும்!

# திருவண்ணாமலையில் பக்தர்களுக்கு ரூ.64.30 கோடியில் தங்கும் விடுதி!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

*சென்னை, அக்.19-*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (17.10.2025) வினா - விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.*



***சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன்:*** *வேதாரண்யம் தொகுதி, காடந்தேத்தியில் உள்ள அருள்மிகு அய்யனார் திருக்கோயிலில் பக்தர்களுக்கு தங்குமிடம் கட்ட அரசு ஆவண செய்யுமா?*

***அமைச்சர் பி.கே. சேகர் பாபு :*** *காடந்தேத்தியில் ஆதினமழை அய்யனார் திருக்கோயிலுக்கு பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்குண்டான போதிய இடவசதி இல்லை. இருப்பினும், அந்த திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்திலோ, மாவட்டத்தில் இருக்கின்ற திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களிலோ ஏதாவது ஒரு இடத்தை தேர்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குண்டான முயற்சியை துறை மேற்கொள்ளும். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் 261 கோடி ரூபாய் செலவில் 38 பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டு அதில் திருவண்ணாமலை உட்பட பல்வேறு இடங்களில் பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது என்பதை பேரவை தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.*

***சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன் அவையில் இல்லாததால் அவருக்கு பதிலாக சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி:*** *நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி காடந்தேத்தியில் அமைந்துள்ள பழமையான அருள்மிகு அய்யனார் திருக்கோயிலுக்கு வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் மிக அதிக அளவில் பொதுமக்கள் வருகை தந்து வழிபாடு செய்கின்றனர். இது இப்பகுதி மக்களின் மனதில் பயபக்தி மிக்க கோயிலாக உள்ளதால் நம்பிக்கையோடு சாமி தரிசனம் செய்கிறார்கள் பிற மாவட்டங்களில் இருந்தும் திருக்கோயிலுக்கு வந்து வழிபடவும் தங்கள் வேண்டுதல்களை நிறைவேறிய பின்பு நன்றி கடன் செலுத்தவும் வருகிறார்கள். எனவே பக்தர்களின் நலன் கருதி குளியலறை மற்றும் கழிப்பறை வசதியோடு ஒரு சமுதாயக்கூடம் அமைத்து தர வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.*

***அமைச்சர்:*** *கடந்த இரண்டு நாட்களாக சமுதாயக்கூடம் மற்றும் திருமண மண்டபங்கள் கட்டுகின்ற கேள்விகள் அவையில் எழுப்பப்படுகின்ற போது நம்முடைய உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் இந்த அவையிலே தான் இருந்தார். மாண்பமை உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதால் அந்த வழக்கின் தீர்ப்பை சட்டப் போராட்டம் நடத்தி திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் எங்கள் முதல்வர் வெற்றி பெற்ற பிறகு நிச்சயமாக அவர் கூறுகின்ற அந்த சமுதாயக்கூடம் கட்டித் தரப்படும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.*

***சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி:*** *திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலிலே அதிக அளவு தெலுங்கானா, ஆந்திர பக்தர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்யும்போது பல தடைகளை ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அந்த கோயிலுக்காக நம்முடைய அரசின் மூலம் என்னென்ன வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அவைக்கு தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.*

***அமைச்சர்:*** *பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேள்வி எழுப்புகின்ற போது தடைகள் பல ஏற்படுத்துகிறார் என்று குறிப்பிட்டார். உண்மைதான். தடைகள் பல உண்டு என்றாலும் அதை தகர்த்தெறிகின்ற திடந்தோள்கள் நம்முடைய முதல்வருக்கு உண்டு. என்பதை மெய்ப்பிக்கின்ற வகையில் பல்வேறு சட்டப் போராட்டங்களுக்கிடையே வெற்றியை பெற்று வருகிறோம். சமீபத்தில் கூட மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவர், தொடுக்கப்பட்ட வழக்கின் காரணமாக நேரடியாக வந்து களத்தில் ஆய்வு செய்து 25 பணிகள் நடைபெற்று வந்த நிலையில் மாண்பமை நீதிபதிகள் நேரடிகள ஆய்வுக்கு பின் 17 பணிகளுக்கு அனுமதி அளித்திருக்கின்றனர். இந்த ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு அந்த திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை விட தற்போது சுமார் 70% கூடுதலாக பக்தர்களின் வருகை கூடுதலாகி இருக்கின்றது.*

*முதலமைச்சர் அவர்கள், அந்த மாவட்டத்தின் அமைச்சர் வேலு அவர்களையும், அந்த மாவட்டத்தை சேர்ந்த துணை சபாநாயகர் பிச்சாண்டி அவர்களையும், துறையின் அமைச்சரான என்னையும் மூன்று பேர் குழுவாக நியமித்து தினந்தோறும் திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். அதன்படியே பணிகளை மேற்கொண்டு வருகிறோம். உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால் கூடுதலாக 64.30 கோடி ரூபாய் செலவில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டு வருகின்றது. அதே போல பொதுப்பணித்துறை சார்பில் அருமை வேலு அவர்கள் முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று 12 இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினை (RO Plant) ஏற்படுத்தி வருகிறார்கள்.*

*மேலும், கிரிவலப் பாதையில் சுமார் 12 இடங்களில் கழிப்பிட வசதிகள் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் முயற்சியால் சி.எஸ்.ஆர். நிதியுதவி மூலம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை திருக்கோயிலில் கோபுரங்கள் மற்றும் விமானங்கள் மின்னொளியால் ஜொலிக்கின்ற வண்ணம் ஏழரை கோடி ரூபாய் செலவிலான திட்டத்தை துவக்கி வைத்து இன்றைக்கு கோபுரங்கள் மின்னொளி பெற்று பிரகாசமாக இருக்கின்றது.*

*அதோடு மட்டுமல்ல இத்திருக்கோயிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்ற போது நீண்ட க்யூ வரிசையில் காத்திருக்கிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு சுமார் ரூ. 4.50 கோடி செலவில் க்யூ வரிசை காம்பளக்ஸ் ஏற்படுத்துகின்ற பணியும் தற்போது நடைபெற்று வருகின்றது. போர்க்கால அடிப்படையில் பக்தர்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற ஒரு அரசாக, ஒரு துறையாக இந்த துறை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.*

*பெருந்திட்ட வரைவின் வாயிலாக இத்திருக்கோயிலின் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிலையில் அந்த பணிகளை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்க இருக்கிறார்கள் என்பதை பேரவை தலைவர் வாயிலாக துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலளித்தார்.*




தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து உள்ளூர் கிராமம் சௌடாம்பிகா நகரில் 13.80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பொது விநியோக கட்டிடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்வின் போது ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வகுமார், முன்னாள் கவுன்சிலர் கோமதி சீனிவாசன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதி கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அவதூறு பரப்பி வரும் அ.தி.மு.க.வினருக்கு கண்டனம்!

# கரூர் புதிய பேருந்து நிலையம் சிறப்பாகச் செயல்படுகிறது!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர்.அக்.19.

கரூர் புதிய பேருந்து நிலையம் பொதுமக்கள் எளிதில் வந்து செல்லும் வகையில் சிறப்பாக செயல்படுகிறது. பஸ் நிலையம் கொண்டுவர முடியாமலும், வளைத்துபோட்ட இடத்தையும் விற்க முடியாமல், முட்டுக்கட்டை போட்டுவிட்டு, சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பி வரும் பழனிசாமி கட்சியினருக்கு வி.செந்தில் பாலாஜி கடும் கண்டனம் தெரிவித்தார்.



கரூர் சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களுக்கு கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கும் பணிகளை கரூர் கோடங்கிப்பட்டியில் கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். 200 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் அமைக்கப்பட வேண்டும் என அறிவித்து, அதற்கான இடம் தேர்வு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு கடவூர் பகுதியில் 250 ஏக்கர் பரப்பளவு அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டு புதிய சிப்காட் அமைப்பதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விரைவில் அதற்கான ஒப்புதலை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு பெற்று, அவர்களது திருக்கரங்க ளால் தொடங்கி வைக்கப்படும்.

கரூர் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐ.டி. பார்க் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. அரவக்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் 6.5 ஏக்கர் பரப்பளவில் புதிய முருங்கை பார்க் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கரூர் மாநகராட்சி பகுதியில் விடுபட்ட இடங்களில் பாதாள சாக்கடை அமைப்பதற்கு ரூ. 460 கோடி மதிப்பீட்டிலும், புதிய குடிநீர் திட்ட பணிகளுக்கு ரூ.260 கோடி நிதி மதிப்பீடு அனுமதியை முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். விரைவில் டெண்டர் கோரப்பட்டு, அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெறும். இப்படி தொடர்ச்சியான நிதி பெறுதல், திட்டங்கள் என்பது மாவட்ட வளர்ச்சி, தொழில் துறை வளர்ச்சி, தொழில் முனைவோர் சொல்லக்கூடிய கோரிக்கைகளை நிறை வேற்றுகின்ற பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

புதிய பேருந்து நிலையப் பகுதியில் எந்த விதமான போக்குவரத்து நெருக்கடியும் இல்லை. தேடி தேடி பிடிக்காதீர்கள். நேரடியாக ஆய்வு செய்யலாம். ஏதோ அதிமுகவினர் சமூக வலைதளங்களில் போடுவதை வைத்து நீங்களும் கேள்வி கேட்கிறீர்கள். பொதுவாக சுயமாக சிந்திக்க வேண்டும். தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அரசு அதிகாரிகள், போக்குவரத்து துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள் பேருந்து நிலையத்திலிருந்து தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதிமுக குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என உள்நோக்கத்தோடு போடக்கூடிய செய்திகளை வந்து கேள்வியாக கேட்காமல், நேரடியாக சென்று மக்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். மக்களுக்கு எவ்வளவு எளிதாக வசதியாக இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். பழைய பேருந்து நிலையம் அருகிலேயே புதிய பேருந்து நிலையம் அமைந்திருக்கிறது. நகரப் பேருந்துகள் இயக்கப்படுகிறது. இரவு ஒரு மணிக்கு வந்தால் கூட எளிதாக வீடுகளுக்கு செல்லும் வகையில் உள்ளது. அதை பொறுத்துக் கொள்ள முடியாமல் இப்படி செய்கிறார்கள்.

இடையில் விபத்தினால் வந்தவர்கள், புதிய பேருந்து நிலையம் வருகிறது என கூறி இடத்தை வாங்கி போட்டு விட்டு அதன் பிறகு அதைக் கட்ட முடியவில்லை. மாநகராட்சி நிர்வாகத்திடம் போய் இந்த இடத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று பிச்சை எடுக்காத குறையாக இடத்தை விற்பதற்கு முயற்சி செய்தனர். தன்னால் கொண்டு வர முடியவில்லை என்பதோடு, கழக அரசு அமைந்து புதிய பஸ் நிலையம் வருவதற்கு எடுத்த முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டனர். உச்சநீதிமன்றம் வரை சென்று, சட்டப் போராட்டம் நடத்தி புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் தற்போது திறக்கப் ப ட்டுள்ளது.

ரூ.15 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. இடையில் விபத்தினால் வந்தவர்கள் தங்களது கம்பெனி பேரில் தார் சாலை அமைக்க அந்த நிதியை மாற்றி கொண்டு போய் விட்டனர். தற்போது புதிய மேம்பாலம் அமைப்பதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பி, மண் பரிசோதனை நடைபெற்றுள்ளது. கரூர் பழைய பேருந்து நிலையம் பகுதியில் நகரும் படிக்கட்டுகள் அமைக்க கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

அ.தி.மு.க. சமூக வலைதளத்தில் போடக்கூடிய செய்திகளை கேள்வியாக கேட்பதை தவிர்த்து விட்டு ஆக்கப்பூர்வமாக இந்த அரசு செயல்படுவதையும், அவர்கள் போட்ட முட்டுக்கட்டைகளையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பொதுமக்கள் பாராட்டும் வகையில் புதிய பேருந்து நிலையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இப்போது கூட தனியார் பேருந்து சங்கத்தினர் சந்தித்து மிகச் சிறப்பாக முதலமைச்சர் அவர்களையும் அரசையும் பாராட்டினர். பேருந்துகளை ஒழுங்குப்படுத்தி அனுப்புவதற்கு அலுவலகம் வேண்டும் என கேட்டுள்ளனர். அதை நிர்வாகத்திடம் கூறி ஆவணம் செய்யப்படும். தனியார் பேருந்துகளாக இருந்தாலும் சரி, அரசு போக்குவரத்து கழக பேருந்துகளாக இருந்தாலும் சரி, பொதுமக்களுக்கு பயன்படக்கூடிய அளவில் துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இன்னும் கூடுதல் வசதிகளையும் செய்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது.

இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார். மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், துணை மேயர் தாரணி சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தைகள் பங்கேற்புத் துறைகளுக்கான கூராய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் புதுக்கோட்டை விஜயா கலந்து கொண்டு மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தைகள் பங்கேற்புத் துறைகளுக்கான கூராய்வுக் கூட்டத்தில் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., முனைவர் மோ.கசிமீர் ராஜ் , மருத்துவர் மோனா மட்டில்டா பாஸ்கர் , மேயர் து.கலாநிதி மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.